திரு. எஸ். சிதம்பர அய்யர் அவர்கள் 1937ஆம் ஆண்டிலிருந்து 1939ஆம் ஆண்டுவரையிலும், மற்றும் 1946ஆம் ஆண்டிலிருந்து 1952ஆம் ஆண்டு வரையிலும் விழுப்புரம் கிராமப் புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

திரு. எஸ். தெய்வசிகாமணி அவர்கள் 1952ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை காஞ்சிபுரம் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

அன்னார்கள் சிறந்த முறையில் சட்டமன்றப் பேரவையில் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் 2 நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்).

(ஆ) இரங்கல் தீர்மானம்—

பேரவை உறுப்பினர் திரு. எஸ். சுப்பையா அவர்கள் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநெல்வேலி மாவட்டம், சங்கரநயினார்கோயில் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. எஸ். சுப்பையா அவர்கள் 16—1—1980 அன்று எதிர்பாராதவிதமாக விபத்தில் மறைந்த செய்தியைப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். பேரவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை மொழிவார்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1971-76, 1977–80 ஆக இரண்டு தடவைகள் திருநெல்வேலி மாவட்டம், சங்கரநயினார்கோயில் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று இப் பேரவையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்தவரும், இனிய பண்பும், உள்ளமும், செயல் திறனும் கொண்டவருமான திரு. எஸ். சுப்பையா அவர்கள் 16—1—1980 ஆம் தேதியன்று எதிர்பாராத விதமாக விபத்தில் மறைந்தமை குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரது மறைவினால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது''.

1980 பிப்ரவரி 1]

திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன்னவர் அவர்கள் கொண்டுவந்த இரங்கல் தீர்மானத்தையொட்டி இரண்டொரு கருத்துக்கள் கூறி, என்னுடை ஆழ்ந்த இரங்கலையும் மறைந்த அருமை நண்பருடைய குடும்பத் தினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மன்றத்தில் அவைமுன்னவரவர்கள் சுட்டிக்காட்டி யதைப்போல இரண்டு தடவைகள் வெற்றிபெற்று, உறுப்பின ராகப் பொறுப்பேற்று, தன்னை வெற்றிபெறச் செய்த தொகுதி மக்களுக்கு அரும்பாடுபட்டு அயராது உழைத்தவர் மறைந்துவிட்ட சங்கரன்கோயில் சுப்பையா அவர்கள் ஆவார்கள். தாழ்த்தப் பட்ட சமுதாய மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கும், பெரியார், அண்ணா வழிநின்று அவர் ஆற்றிய பணிகள் ஏராளம். பள்ளிப்பருவம் முதற்கொண்டே திராவிட இயக்கத்தின்பால் தன்னுடைய உள்ளத்தைப் பறிகொடுத்து, இயக்கக் கொள்கைகளிலே சற்றும் தொய்வு ஏற்படாத ஆர்வம் கொண்டு உழைத்தவர். வாலிப வயதில் நம்மைவிட்டு அவர் பிரிந்து விட்டார். பேருந்து விபத்தின் காரணமாக அவர் நம்மிட மிருந்து பிரிக்கப்பட்டார் என்பதை அனைவரும் அறிவோம்.

இந்த நேரத்தில் நான் அரசுக்குச் சொல்ல விரும்புகிறேன்—குற்றச்சாட்டாக அல்ல, இரங்கல் தீர்மானம் இது-அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்ற அளவில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த திங்கள்—அதாவது ஜனவரித் திங்களிலே மாத்திரம் அரசுச் சார்புடைய போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், நான் அறிந்த வரையில் இப்படி மூன்று தடவைகள் விபத்திற்குள்ளாகி, ஏறக்குறைய பத்திலிருந்து பதினைந்து பேர்கள் வரையிலே மரணத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட விபத்துக்களின் காரண மாக விலை மதிப்பற்ற உயிர்களெல்லாம் பறிக்கப்பட்டிருக் கின்றன என்பதை நாம் கவனத்திலே கொண்டு மிகுந்த எச்சரிக் கையாக நடந்து கொள்ள வேண்டுமென்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.

உயிரிழந்தவர்களுடைய குடும்பங்களுக்கு அனுதாபம் தெரிவிக்கின்ற அதேநேரத்தில், அரசுச் சார்புடைய போக்கு வரத்துக் கழகங்களினுடைய பேருந்துகளின் விபத்துக்கள் காரண மாக அவர்கள் உயிரிழந்திருக்கின்ற காரணத்தினால் அதற்கென பொறுப்பையேற்க வேண்டிய கடமையுணர்ச்சியோடு, போக்கு வரத்துக் கழகங்களின் சார்பாக உயிரிழந்தோர் அனைவருடைய குடும்பங்களுக்கும்-சங்கரன்கோயில் சுப்பையா அவர்களின் குடும்பத்திற்கு மட்டும் அல்ல-அனைவருடைய குடும்பங்களுக்கும் தக்க உதவிகளையும், நல்ல இழப்பீட்டுத் தொகையினையும் வழங்கிட வேண்டுமென்பதையும் எடுத்துக் கூறி, எங்கள் நெஞ்சம் நிறைந்த நண்பர், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் திருவிளக்கு களிலே ஒருவர் சுப்பையா அவர்களுடைய மறைவுக்கு ஆழ்ந் இரங்கலைத் தெரிவித்து, அமைகின்றேன்.

[1980 பிப்ரவரி 1

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, அவை முன்னவரவர்கள் முன்மொழிந்த இந்த இரங்கல் தீர்மானத்திலே காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன். மதிப்பிற்குரிய, காலஞ்சென்ற உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். அவர் இரண்டு முறைகள் ஒரு தொகுதி யிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும் பொழுது அவர் மக்களுக்கு நல்ல முறையிலே சேவை செய்திருக் கிறார் என்பதை நாம் உணர்ந்துள்ளோம். மிகுந்த அடக்க மானவர். அது மட்டுமல்லாமல், அவர் பேரிலே எந்தவிதமான புகாரும் இல்லாத அளவிலேயும், பொதுமக்களிடத்திலே அடக்கமும், செயல்திறனும் நிறைந்த நண்பராகவும் விளங்கியவர். அன்னாருடைய மறைவு நமக்கெல்லாம் ஒரு நஷ்டம்.

அவருடைய குடும்பத்தினருக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, மாணபுமிகு நிதியமைச்சர் அவர்களால் மொழியப்பட்ட அனுதாபத் தீர்மானத்தினுடைய-திராவிட முன்னேற்றக் கழகத்தி னுடைய சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. எஸ். சுப்பையா அவர்கள் அகால மரணம் அடைந்தது குறித்துக் கொண்டு வரப்பட்டுள்ள இரங்கல் தீர்மானத்தினுடைய கருத்துக்களிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியையும் இணைத்துக் கொள்கிறேன் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டப் பேரவை உறுப்பினர் திரு. எஸ். சுப்பையா அவர்கள் அமைதியான முறையிலே, எளிய முறையிலே தன்னுடைய வாழ்க்கையை நடத்திய ஒரு பொது ஊழியர். அவர்கள் போக்குவரத்து விபத்திலே எதிர்பாராத விதமாக மரணம் அடைந்தது குறித்து நாங்கள் பெரிதும் வருத்தமடைகிறோம்.

[முற்பகல் 9-10]

அவருடைய மறைவினால் வருந்தக்கூடிய அவருடைய குடும்ப உறுப்பினர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களுடைய அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம். அவருடைய இழப்பினால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய அவருடைய கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகத் திற்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டு, இந்த இரங்கல் தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன்.

1980 பிப்ரவரி 1]

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவரவர்களே, அவை முன்னவர் அவர்கள் பேரவையில் மொழிந்த இரங்கல் தீர்மானத்தை ஒட்டி, நம்மைவிட்டு மறைந்திருக்கிற நண்பர் திரு. எஸ். சுப்பையா அவர்களுடைய குடும்பத்தினருக்கு ஜனதா கட்சியின் சார்பில் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. சுப்பையா அவர்கள் இந்த விபத்தில் மாட்டிக்கொள்வதற்குக் காரணமாக ஒரு செய்தியை நான் கேள்விப்பட்டேன். திடீரென்று அவருடைய தொகுதியில் ஏதோ ஒரு நிகழ்ச்சி நடைபெற்றதாகவும் அவர் ஏற்கனவே ரெயிலில் செல்வதற்கு டிக்கட் வாங்கியிருந்ததாகவும் ஆனால் ரெயிலில் சென்றால் தாம் தேவைப்படுகிற அந்தக் காரியத்தைச் செய்வதற்குக் காலதாமதம் ஏற்பட்டு விடுமோ என்ற ஐயப்பாட்டோடு பஸ்ஸில் சென்றால் சீக்கிரமாக ஊர் சென்று சேரலாம் என்ற எண்ணத்தோடு பஸ்ஸில் சென்றதாகவும் கூறப்படுகிறது. ஆதலால் எந்த அளவுக்குக் கடமை உணர்ச்சியோடு, தியாக உணர்ச்சியோடு செயல்பட்டுக் கொண்டிருந்தார் என்பதை நாம் உணர்வதற்கு இது ஏதுவாக இருக்கிறது. நான் அறிந்த அளவில் எந்தவிதமான புகாரும் பொது மக்கள் கூறுவதற்குக் கூட இடம் அளிக்காத வகையில் சிறந்த சேவை செய்து கொண்டிருந்தார் என்பதை நான் இந்த மன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவரை இழந்துவிட்டது தாழ்த்தப்பட்ட சமுதாயம் மட்டும் அல்ல. நமது மாநிலமே நிச்சயமாக இம்மாதிரி நல்ல தொண்டனை இழந்திருப்பது வருந்தத் தக்கது. ஆகவே, ஜனதா கட்சியின் சார்பில் எங்களுடைய இரங்கலையும் நான் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

•

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, அவை முன்னவர் அவர்களால் மொழியப்பட்ட இந்த இரங்கல் தீர்மானத்தின் உணர்வோடு எங்களுடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உணர்வையும் இணைத்துக் கொண்டு நம்முடைய மறைந்த திரு. சுப்பையா அவர்கள் இரண்டு தடவை சங்கர நயினார்கோவில் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கு அமைதியான முறையில் பணியாற்றி வந்த நல்ல தொண்டர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர், அனைவரோடும் நல்ல அன்போடு பழகக்கூடிய சிறந்த பண்புள்ளவர். அவருடைய மறைவு அனைவருக்கும் மிக வருத்தம் அளிக்கக்கூடிய மறைவாகும். அதுவும் ஒரு விபத்திலே இறந்தது மிக துர்பாக்கியமான விஷயமாகும். அன்னாருடைய குடும்பத்திற்கும் அவருடைய தொகுதி மக்களுக்கும், அவருடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எங்களுடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

[1980 பிப்ரவரி 1

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர்வர்களே, அருமைச் சகோதரர் திரு. எஸ். சுப்பையா அவர்களுடைய இறப்பிற்காக அவை முன்னவர் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்தை ஒட்டி, உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக எங்களுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. எஸ். சுப்பையா அவர்கள் பார்ப்பதற்கு ஆடம்பரங்கள் ஏதுமின்றி ஒரு சாதாரண மனிதராகக் காணப்பட்டார். மக்களுக்குத் தொண்டு செய்வதையே அவர் தன்னுடைய தொழிலாகக் கொண்டிருந்தார் என்பது, அந்த விபத்து ஏற்பட்ட நேரத்தில், அவர் தாம் ஏற்றுக்கொண்டிருந்த பணியைத் தொகுதி மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு, தன்னுடைய சவுகரியத்தை எல்லாம் விட்டுவிட்டு, எப்படியும் சென்று, தாம் மேற்கொண்டிருக்கிற பணியை நிறைவேற்ற வேண்டுமென்ற அந்தக் கொள்கை உறுதியோடு சென்றதிலிருந்து தெரிகிறது.

அவர் இரண்டு முறை சட்டமன்றத்திற்கு அதே தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று அறிகிறபோது அந்தத் தொகுதி மக்களுக்கும் அவருக்கும் இருக்கும் பிடிப்பு நன்றாகத் தெரிகிறது. அந்தத் தொகுதி மக்களுக்கு அவர் ஆற்றிய தொண்டுகள்தான் அவரை மீண்டும் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைக்கும் அளவுக்கு மக்களுடைய பெரும்பான்மை நம்பிக்கையை அவர் பெற்றிருந்திருக்கிறார் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்து பணியாற்றினார் என்பதை அவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் இருந்து அறிந்து கொள்ள முடிகிறது. குறிப்பாக அவருடைய வாழ்க்கைப் பின்னணியைப் பார்க்கிறபோது அவர் பெரும் செல்வந்தராக இல்லாது சாதாரண மனிதராக இருந்து மக்களுக்குத் தொண்டாற்றியது பாராட்டுதற்குரியது. அன்னாருடைய இழப்பு அந்தக் குடும்பத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு என்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்த முறையிலே இறந்த சுப்பையா அவர்கள் குடும்பத்திற்கு, ஒரு உதவித் தொகை அல்லது இழப்பீட்டுத் தொகை அவருடைய இழப்பை ஓரளவு பூர்த்தி செய்கிற வகையிலே கொடுப்பதற்கு தமிழக அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழக அரசாங்கம் விபத்தில் இறந்தவர்கள் குடும்பத்திற்கு உடனடியாக ஆயிரம் ரூபாய் கொடுக்கும் திட்டத்தை வைத்திருக்கிறது. அந்தத் தொகையை உயர்த்தித் தருமாறு கேட்டு அன்னார் மறைவுக்கு உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக இரங்கலைத் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தின்மீது காந்தி காமராஜ் தேசீய காங்கிரசின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நெல்லை

மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சுப்பையா அவர்கள் கடந்த இரண்டாண்டுக் காலமாக என்னோடு நல்ல முறையில் பழகி வந்திருக்கிறார்கள். அவர் இரண்டு முறையாக அந்தத் தொகுதியிலிருந்து சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இரண்டு முறை சட்ட மன்ற உறுப்பினராக இருந்தும் அவர் தனக்கு என்று, தன்னுடைய குடும்பத்திற்கு என்று பணம் ஏதுவும் சேர்த்துக் கொள்ளவில்லை. அந்த வகையிலே தனக்கென்று, குடும்பத்திற்கென்று பணம் ஏதும் சேர்த்துக் கொள்ளாது மக்களுக்காகப் பணி புரிந்த அவருடைய குடும்பத்திற்கு அரசு உதவித் தொகையாக ஒரு நல்ல குறிப்பிட்ட தொகை கொடுத்து அந்த குடும்பத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரது குடும்பத்திற்கும், அவர் சார்ந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பையா அவர்களுடைய மறைவுக்காக அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தின்மீது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தை, மறைந்த அந்தப் பேரவை உறுப்பினருடைய குடும்பத்திற்கும், அவரை இழந்து தவிக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தெரிவித்துக் கொள்கிறேன். அரசுப் பணியில் இருக்கிறவர்கள் இறந்துவிட்டால் கொடுக்கிற உதவித் தொகை போன்று பேரவை உறுப்பினராக இருந்து விபத்தில் மறைந்துவிட்ட அவருடைய குடும்பத்தினருக்கும் அரசு அந்த அளவு ஒரு குறிப்பிட்ட உதவித் தொகையைக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். அன்னாருடைய குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. டி. பி. எம். பெரியசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அருமை நண்டர் சுப்பையா அவர்கள் அகால மரணம் அடைந்தது குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த அந்த இரங்கல் தீர்மானத்தை தேசிய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக வழிமொழிந்து சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அருமை நண்பர் சுப்பையா அவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அந்தப் பகுதியில் வாழக்கூடிய பிற்பட்ட சமுதாயத்தையும், முன்னேறிய சமுதாயத்தையும் சேர்ந்த மக்களோடு எவ்வளவு அன்போடும் பாசத்தோடும் பழகிக் கொண்டிருந்தார் என்பதை நான் நன்றாக அறிவேன். அருமை நண்பர் சட்ட மன்ற உறுப்பினராவதற்கு முன்னால் எவ்வளவு துடிப்பு மிகுந்தவராக இருந்தார் என்பதையும், அவர் பதவியேற்ற பிறகு அவரிடம் இருந்த அடக்கமும் பணிவும் எந்த அளவுக்கு இருந்தது என்பதைப் பார்க்கிறபோதும் அவர் மக்களுக்காக இடைவிடாது பணியாற்றிய தன்மையையும் பார்க்கிறபோதும் அப்படிப்பட்ட நல்ல

நண்பர் நம்மை எல்லாம் விட்டுப் பிரிந்திருக்கிறார் என்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. அந்த நல்ல உள்ளம், அந்த நல்ல பண்பு மிகுந்த நண்பரை, இழந்து நிற்கிற குடும்பத்திற்கும் அவர் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தேசிய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.20]

மாண்புமிகு கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, இரங்கல் தீர்மானத்தின் மீது கருத்துக்களைத் தெரிவித்த கட்சித் தலைவர்கள், குறிப்பாக எதிர் கட்சித் தலைவர் அவர்களும், மார்க்கபந்து அவர்களும், ஆண்டித்தேவர் அவர்களும் சில கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்: நான் இதை வாதத்திற்காக சொல்லவில்லை—நிலைமையை விளக்குவதற்காகச் சொல்கிறேன். மதிப்பிற்குரிய சுப்பையா அவர்கள் பஸ் விபத்தில் அகால மரணம் அடைந்தார் என்ற செய்தி அப்போது டெல்லியிலே இருந்த முதலமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில் உணவு அமைச்சர் எட்மண்ட் அவர்களும், போக்குவரத்துத் துறை அமைச்சர் பொன்னையன் அவர்களும் அந்த இடத்திற்கு விரைந்து சென்று தேவையான காரியங்களில் ஈடுபட்டதை இந்த அவை அறியும். நடைபெற்ற விபத்திற்கு நாம் அனைவரும் வருந்துகிறோம்.

எதிர்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தபோது இப்படிப்பட்ட விபத்துக்கள் இரண்டு மூன்று முறை நடைபெற்று இருக்கின்றன என்றும், அதன் மூலம் 10, 15 பேர்கள் மாண்டார்கள் என்றும் எடுத்துக் காட்டி அதைத் தவிர்க்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொண்டார்கள். அதற்கென ஸ்பீடு கன்ட்ரோல் கொண்டுவரப்பட்டு அதைத் தவிர்க்கின்ற முறையில் அந்த முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை அரசின் சார்பாக இந்த அவைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு, எதிர்க்கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் இறந்து போனவர்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். நான் அரசின் சார்பிலும் முதலமைச்சர் சார்பிலும் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்—நிச்சயமாக அந்தக் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படும் என்ற உறுதியை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதோடு, தற்போது சட்டமன்ற பேரவை அல்லது சட்ட மன்ற மேலவை உறுப்பினர் ஒருவர் பதவிகாலம் முடிவடைவதற்கு முன்னரே இறந்து போனால் அவரது பதவிக் காலத்தில் எஞ்சியுள்ள காலத்திற்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் அவர்களின் குடும்பத்திற்கு படி வழங்கப்படும் என்று இப்போது

சட்டத்தில் இருக்கிறது. இந்தப் படி, இனிமேல் திங்கள் ஒன்றுக்கு ரூ. 250 ஆக இறந்த உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இது இந்த ஆறாவது பேரவை தொடக்க காலத்தில் இருந்து அமலுக்கு வரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா அவர்கள் மறைவுக்கு இந்த பேரவையிலே இருக்கிற அத்தனைக் கட்சித் தலைவர்களும், அமைச்சர் பெருமக்களும், உறுப்பினர்களும் தெரிவித்துக்கொண்ட தங்களுடைய வருத்தத்தோடும், இரங்கல் செய்தியோடும் நானும் இணைந்து அன்னாருடைய குடும்பத்தாருக்கு என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவை முன்னவரின் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப் பெற்றது

மாண்புமிகு பேரவைத் தலைவர்— உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(பின்னர் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மவுனமாக நின்றனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன. பேரவை நாளை காலை 9.00 மணி அளவில், மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 9.25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

3. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

*1. ஓய்வுபெற்ற தலைமைப் பொறியலாளர் திரு. எஸ். எச். மகாதேவனை 13-7-1979—ஆம் தேதியிலிருந்து மேலும் ஓராண்டு காலத்திற்கு தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் அலுவல் சார்பற்ற உறுப்பினராகத் தொடர்ந்து நீட்டிப்பது குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 5-9-1979—ஆம் தேதியிடப்பெற்ற 1757 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971—ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல்-அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

*2. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தீர்வை விதிக்கப் பெறாத நிலங்களின் மீது ரயத்துவாரி வரி விதிப்புச் சட்டத்தை 16-10-1979-ஆம் தேதி முதற்கொண்டு செயலுக்குக் கொண்டு